முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04 ஆம் நாள் திங்கள்கிழமை

**இ.ம.எண்.13/2025**

in

**அசல் வழக்கு எண்.237/2014**

1. பரமு அம்மாள் (இறந்தவர்)
2. சுவாமிநாதன்
3. கோமதிநாயகம் பாண்டியன்
4. முத்துக்குமார்
5. ராமையா (இறந்தவர்)
6. சென்பகராஜன் ... மனுதாரர்கள்/ வாதிகள்

/எதிர்/

1. கோட்டைச்சாமி
2. முத்துக்குமார்
3. கிருஷ்ணசாமி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 04.08.2025 இன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.S.S.பிரதாப்ராஜ் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.சண்முகையா அவர்கள் ஆஜராகியும், இம்மனுவிற்கு எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ள நிலையில், மனு மற்றும் அசல் வழக்கு கோப்பு, மனுதாரர்கள் தரப்பு வாத உரையை கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.08.04 15:30:32 +0530

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது, மனுதாரர்கள் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 6, விதி 17, 18 மற்றும் பிரிவு 151–ன்படி, இவ்வழக்கில் 11.04.2024, 03.11.2024 ஆகிய தேதிகளில் இறந்துபோன 1ம் மனுதாரர் மற்றும் 5ம் மனுதாரருக்கு 6ம் மனுதாரர்/6ம் வாதியை வாரிசு நிலையில் கட்சி சேர்த்துக் கொள்ளக்கோரிய வ.வி.எண்.11/2025 மனுவை இந்நீதிமன்றம் 23.07.2025 தேதியில் அனுமதித்துள்ளதை அனுசரித்து, இம்மனுவில் கண்டபடி அசல் வழக்கை சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **<u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்</u> :–**

மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் என்றும், அசல் வழக்கை 1ம் வாதி, 5ம் தபசில் மற்றும் 7ம் தபசில் சொத்தையும், 2ம் வாதி 2ம் தபசில் சொத்தையும், 3ம் வாதி 3ம் தபசில் சொத்தையும், 4ம் வாதி 4ம் தபசில் சொத்தையும், 5ம் வாதி 6ம் தபசில் சொத்தையும் அமைதியாக அனுபவம் செய்து வருவதையும், பிராதின் தபசில் சொத்துக்களை 1ம் பிரதிவாதி 11.12.2008 தேதியில் பெற்ற பதிவு கிரைய ஆவணமும், 29.05.2009 தேதியில் பெற்ற சீர்திருத்த ஆவணமும் சட்டப்படி செல்லக்கூடியதில்லை என்றும் மற்றும் பரிகாரங்கள் கோரி இவ்வழக்கை 1 முதல் 5 மனுதாரர்கள் எதிர்மனுதாரர்கள் மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், இவ்வழக்கில் 1 முதல் 5 மனுதாரர்கள் தரப்பில் பதில் எதிர்வழக்குரையை ரிசிவ் செய்து கொள்ள வ.வி.எண்.6/2024 மனு தாக்கல் செய்து நிலுவையில் இருக்கும்போது, 2 முதல் 4 மற்றும் 6ம் மனுதாரருக்கு தாயரான 1ம் மனுதாரரான 1ம் வாதி கடந்த 11.04.2024 தேதியிலும், தந்தையான 5ம் மனுதாரரும், 03.11.2024 தேதியிலும் இறந்துவிட்டார்கள் என்றும், இறந்துபோன 1, 5 மனுதாரர்களுக்கு 6ம் மனுதாரரும், 2 முதல் 5 மனுதாரர்கள் மட்டுமே வாரிசுகள் என்றும், இறந்துபோன 1, 5 மனுதாரர்களுக்கு வழக்கில் பதிவில் இருந்து வரும் 2 முதல் 4 மனுதாரர்களும் மற்றும் ஒரு மகனான 6ம் மனுதாரரும் வாரிசுகள் என்றும், இறந்துபோன 1, 5 மனுதாரர்களின் மற்றொரு வாரிசான 6ம் மனுதாரரை மட்டும் வழக்கில் வாரிசு நிலையில் கட்சியாக சேர்த்துக் கொள்ளக்கோரிய வ.வி.எண்.11/2025 மனுவை இந்நீதிமன்றம் 23.07.2025 தேதியில் அனுமதித்து

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2025.08.04 15:30:39 +0530

உத்தரவிட்டுள்ளதை அனுசரித்து இம்மனுவின் அடியிற்கண்டபடி அசல் வழக்கை சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளிக்க வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் இருக்கிறது என்றும், இல்லாதுபோனால் மனுதாரர்களுக்கு மிகுந்த கஷ்ட, நஷ்டம் ஏற்பட்டுவிடக்கூடியதாக இருக்கிறது என்றும், ஆகையால் இவ்வழக்கில் 11.04.2024, 03.11.2024 ஆகிய தேதிகளில் இறந்துபோன 1ம் மனுதாரர் மற்றும் 5ம் மனுதாரருக்கு 6ம் மனுதாரர்/6ம் வாதியை வாரிசு நிலையில் கட்சி சேர்த்துக் கொள்ளக்கோரிய வ.வி.எண்.11/2025 மனுவை இந்நீதிமன்றம் 23.07.2025 தேதியில் அனுமதித்துள்ளதை அனுசரித்து, இம்மனுவில் கண்டபடி அசல் வழக்கை சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இம்மனுவின் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை இல்லை என கற்றறிந்த அரசு வழக்கறிஞரால் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, அசல் வழக்கு கோப்பு மற்றும் மனுதாரர்கள் தரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) மனுதாரர்களால் இம்மனுவானது மேற்படி I.A.No.11/2025–ல் பிறந்த உத்தரவின்படி 6ம் மனுதாரரை அசல் வழக்கில் 6ம் வாதியாக கட்சி சேர்த்து அசல் வழக்கில் பிரதான வழக்குரையை சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதிக்கக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) அசல் வழக்கில் 6ம் மனுதாரரை அவசிய கட்சியாக சேர்க்கவேண்டி மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மனு தாக்கல் செய்து மேற்படி மனு I.A.No.11/2025 நம்பராகி இந்நீதிமன்றத்தால் 23.07.2025 தேதியில் மேற்படி 6ம் மனுதாரரை கட்சி சேர்க்க அனுமதித்து இந்நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி 6ம் மனுதாரரை அசல் வழக்கில் 6ம் வாதியாக கட்சி சேர்த்து பிரதான

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.08.04 15:30:45 +0530

வழக்குரையை சீர்திருத்தம் செய்வதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட, நஷ்டம் ஏற்படப்போவதில்லை. இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்படத்தக்கது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

7) ஆகையால், இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

8) **இறுதியாக:–**

இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. தரப்பினர்கள் தங்களது செலவுத்தொகையை தாங்களே ஏற்றுக்கொள்ளவேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.08.04 15:30:51 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :–**

– இல்லை –

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.08.04 15:30:57 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

மு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,
I.A.No.13/2025
in
O.S.No.237/2014
உத்தரவு (Draft / Fair)
நாள் : 04.08.2025